# அணுஆயுதபரவல் தடை: அமெரிக்கா-ரஷ்யா உடன்பாடு?

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49
போன் : 89

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 9
இதழ் 136

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 13 ரபி அவ். 18 செவ்வாய்க்கிழமை [27-6-67]

வாஷிங்டன், ஜூன் 26

அணு ஆயுதம் பரவாமல் தடைசெய்வதக்கு அமெரிக்க, ரஷ்ய தலைவர்களின் சந்திப்பின்போது கொள்கையளவில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் உலகஅபாயம்குறையுமென்றும், ஜோன்சன் தெரிவித்தார்.

அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன் ரஸ்கும், ரஷ்ய வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோவும், ஆலோசனையை தொடர்ந்து நடத்துவார்களென்றும் அவர் நிருபர்கள் கூட்டத்தில் பேசும்போது மேலும் குறிப்பிட்டார்,

## ஜப்பானில் அணுக்கதிர்

டோக்கியோ, ஜூன் 26

அண்மையில் சீனாவின் ஜலவாயுக் குண்டு ஒன்று பரிசோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெய்துள்ள முதல் மழைக்குப் பின் மத்திய ஜப்பானில் விஷ அணுக்கதிர்கள் 10 சதவீதம் அதிகமாகப் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# டாக்டர்கள் பிரச்னை பற்றி உடனே விசாரிக்க உத்தரவு

## ராஜாங்க மந்திரி நடவடிக்கை 'தாமதவேலை' தொடர்கிறது

கொழும்பு, திங்கள்

அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர்கள் மேற்கொண்டுள்ள 'தாமத வேலை' இயக்கத்துக்குக் காரணமாகவுள்ள பிரச்னை பற்றி உடனடியாக முழு விசாரணை நடத்தும்படி ராஜாங்க மந்திரியும், அரசாங்கத்தின் தற்காலிகத் தலைவருமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று அரசாங்கச் சேவைக் கமிஷனைக் கேட்டுள்ளார்.

நோயாளி ஒருவரைக் கவனிப்பதில் கவலையீனமாக கடமைபுரிந்ததாக டாக்டர் திருமதி மலலகம என்பவரை சுகாதார இலாகா வேலைநீக்கம்செய்ததை ஆட்சேபித்தே டாக்டர்கள் 'போராட்டம்' நடத்திவருகின்றனர். இந்த டாக்டரின் வேலை நீக்கம் பற்றி உடனடியாக விசாரணை நடத்தும்படியும் அதன் விபர அறிக்கையை நாளை அல்லது நாளை மறுதினம் தமக்குக் கிடைக்கும்படியும் ராஜாங்க மந்திரி அரசாங்க சேவைக் கமிஷனைப் பணித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன ராஜாங்க அமைச்சரைச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அரசாங்க வைத்திய சேவையாளர் சங்கம், விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் பிரச்னை முடிவடையாமல் இருப்பதால் 'தாமத வேலை' தொடர்ந்து நடைபெறுமென்று அறிவித்துள்ளது.

நேற்று லேடி ரிஜ்வே ஆஸ்பத்திரியில் குழந்தைகளைச் சிகிச்சைக்குக் கொண்டு வந்த தாய்மார்கள் பொறுமையிழந்ததால் ஏற்பட்ட ஒரு சம்பவத்தின் காரணமாக ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி பொலிசாரை மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

## 4-30 மணிவரை 92 நோயாளர் அனுமதி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நேற்றுப் பிற்பகல் 4-30 மணிவரை 92 நோயாளர்கள் வார்ட்களில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. நேற்று நள்ளிரவுவரை தொடர்ந்து நோயாளிகள் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

## யாழ். ஜவுளிக்கடைகளில் திடீர் சோதனை

### ரூ.10 ஆயிரம பெறுமதியான சேலைகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஜவுளிக்கடைகளில் நேற்றுக் காலை முதல் சுங்கப் பகுதியினர் நடத்திய திடீர் சோதனையின்போது இரு கடைகளில், சுமார் 10,000 ரூபா பெறுமதியான சேலைகளைக் கைப்பற்றி விசாரணை செய்துவருவதாகத் தெரியவருகிறது.

சுமார் 12 ஜவுளிக்கடைகளில் சுங்கப் பகுதியினர் கையிருப்புப் பற்றிய புள்ளி விபரங்களைச் சேகரிப்பதற்காகப் பரிசோதனை செய்தபோதே இச்சேலைகள் கண்டுபிடிக்கப்பட்டதாம். இச்சேலைகளில், காஞ்சிபுரம், டெக்கா, ஔவையார் வகைகள் அடங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

சுங்கப் பகுதி உதவிக் கலெக்டர் திரு. பதிரன விமலதர்மாவின் உத்தரவின்படி சுங்க இலாகா உதவித் தடுப்பாளர்களான திருவாளர்கள் எம், வீரசுந்தரம், எஸ். தாமோதரம்பிள்ளை, ஆர். எஸ். மூர்த்தி, எஸ், புஷ்பபாலன் ஆகியோர் கடைகளில் திடீர் சோதனை நடத்தினர்கள்.

சில சயிக்கிள் 'பாட்ஸ்' கடைகளிலும் சுங்கப் பகுதியினர் சோதனை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

## நேப்பாலுக்கு இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி' ஜூன் 26

சீனர்கள் காட்மண்டுவில் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவது குறித்து இந்திய அரசாங்கம் நேப்பால் அரசாங்கத்துக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## ஜப்பானில் பிரதமர் டட்லி

டோக்கியோ, ஜூன் 26

இலங்கை பிரதமமந்திரி இன்றுஜப்பான் தலைநகரான டோக்கியோநகர் வந்துசேர்ந்தார்.

ஜப்பான் பிரதம மந்திரியும் வெளிநாட்டு மந்திரியும் அவரை வரவேற்றார்கள்.

## மாப்பிள்ளை தோழன் பிணமாக தொங்கினர்

யாழ்ப்பாணம், செவ்.

தோழனகச் செல்லும் தனக்குத் தந்தை மோதிரமும், நைலக்ஸ் சேட்டும் வாங்கித் தராததால் மனமுடைந்த நவாலி தெற்கைச் சேர்ந்த ஞானபரணம் ஞானரத்தினம் என்ற இளைஞர் தற்கொலை செய்துகொண்டார். அதனல் திருமணம் நடைபெறவேண்டிய வீட்டில் மரணச்சடங்கு நடைபெற்றது. நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த சகோதரியின் திருமணத்திற்குத் தோழனகச் செல்லஇருந்த இவ் இளைஞர் நைலக்ஸ்சேட்டும், மோதிரமும் வாங்கித்தரும்படி தந்தையைக் கேட்டாராம். தந்தை, கையில் பணமில்லாததால் வாங்கித்தர முடியாது எனக் கூறினராம். இதனல் மனமுடைந்த ஞானபரணம் ஞானரத்தினம் என்ற அவ் இளைஞர் நேற்றுக்காலை 6 மணிக்கே மாமரத்தில் தூக்குப்போட்டுத் தற்கொலைசெய்துகொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி க. சேனதிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## "'நான் இருந்து உலகத்துக்கு பயன் இல்லை"

### கடிதம் எழுதிவைத்துவிட்டு வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

'கண்ணிருந்தும் பார்க்க முடியாவிடில் என்ன பலன்; காதிருந்தும் கேட்கமுடியாவிடில் என்ன பலன்; நானிருந்தும் உலகத்திற்குஎன்ன பலன். உலகத்தைவெறுத்தபடியால் இப்படி செல்கிறேன். இதற்கு ஒருவரும் பாத்திரமில்லை'.

பெற்றோருக்குமேற்கண்டவாறு கடிதம்எழுதிவைத்துவிட்டு, 24வயதான திருமணமாகாத வாலிபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்திதற்கொலை செய்துகொண்டசம்பவம் நேற்றுக்காலை யாழ்ப்பாண நகரத்தில் நடந்தது.

யாழ்ப்பாணம் முருகன் ஸ்ரோஸ் சொந்தக்காரரின் மூத்த மகனை காந்திமதிநாதன் வேலாயுதத்தின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு,

[6-ம் பக்கம் பார்க்க]

## புதிய உருவில் ஐ. நா. சபை

### சூ-என்-லாய் கோருகிறர்

பீகிங், ஜூன் 26

ஒரு புரட்சிகரமான ஐ. நா. சபை, உலகுக்குத் தேவையெனச் சீனப் பிரதமர் சூ-என்-லாய் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் வலியுறுத்தினர்.

"ஐ. நா. சபை புனருத்தாரணம் செய்யப்பட்டு, திருத்தியமைக்கப்படவேண்டும். அப்படிச் செய்யாவிடின், புதிய உலக ஸ்தாபனம் ஒன்று நிறுவுவதற் [illegible] கரிக்கும்' என்றார் திரு. சூ-என்-லாய்.

## ஜே. ஆர்.-எம். டி. எச். ஆலோசனை

### டாக்டர்களின் 'தாமதவேலை' இயக்கம நீடிப்பு

கொழும்பு, திங்கள்

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நடத்தும் "தாமத வேலை" இயக்கம் காரணமாக கொழும்பிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் நாட்டின் இதர பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் வார்டுகளில் அளவுக்கு அதிகமான 'நோயாளர்' அனுமதிக்கப் பட்டுள்ளனர். வெளிநோயாளர் பகுதியிலும் ஆஸ்பத்திரிகளில் பெருந்தொகையானநோயாளர் திரள்கின்றனர். இவர்களில் பலரும் சிகிச்சை பெருமலே திரும்ப வேண்டியேற்படுகிறது.

டாக்டர்களின் தாமத வேலை இயக்கம் சம்பந்தமாக பதில் பிரதமரும் ராஜாங்க அமைச்சருமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன இன்று சந்தித்துப் பேசவிருக்கிறர்.

[2-ம் பக்கமும் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகிலே நாம் எது பற்றியும் குற்றம் குறை கூறப்படாது. எதுநடப்பினும் அது தெய்வத்தின் இச்சையால் நடப்பதாகும். அவ்வித பூரண சரணாகதியடையுமுன், நாம் மற்றவர்களுடன் அன்புகாட்டி அமைதியாகவாழமுற்படவேண்டும். நமக்கு ஏற்படும் தடைகள் முன்னேற்றத்துக்கு உதவி செய்வனவேயாகும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
ஆனி மீ 13 உ (27-6-67)

## அடக்கம் வேண்டும்

'வெற்றியில் அடக்கமும் அமைதியும் அவசியம்' என்று கோப்பாய் எம். பி.யும் பிரபல வழக்கறிஞருமான திரு. சி. கதிரவேலுப்பிள்ளை விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார். செல்வச் சந்நிதி ஆலயப்பிரவேச வழக்கின் தீர்ப்பு சைவ சமயத்துக்கு வெற்றியும் சாதிப்பாகுபாட்டுக் கொடுமைக்குத் தோல்வியுமாகும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திரு. கதிரவேலுப்பிள்ளை இந்த வழக்கின் வெற்றியைக்கண்டுமுறை தவறி நடந்துகொள்ளக் கூடாதென்றும் சரியாக அறிவுறுத்துகிறார்.

ஆலயப்பிரவேச வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்யப்படவிருப்பதால் அந்த வழக்கு சம்பந்தமாகவோ தீர்ப்பு பற்றியோ நாம் எதுவும் கூறவிரும்பவுமில்லை, கூறுவது முறையுமல்ல. ஆனால் இந்த வழக்கின் தீர்ப்பு வெளியான பின் சில பகுதிகளில் ஒரு சிலரின் தூண்டுதலால் சிலர் முறைதவறிநடந்து கொள்வதாகவும் வெற்றி 'வெறி'யாக்கப்படுவதாகவும் கிடைத்துள்ள செய்திகள் கவலையளிப்பதாக உள்ளது. நீண்டகாலமாகச் சமுதாயத்தில் ஊறிப்போன ஒரு பழக்க வழக்கத்தை உடனடியாகமாற்றுவது சுலபமல்ல. எனினும் இந்தப் பழக்க வழக்கம் மாற்றம்பெற்றுவருகிறதென்பது உண்மையே இதற்கு சட்டம் துணை செய்யலாம். ஆனால் சட்டத்தினுல் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. சட்டத்தினுல் ஏற்படுத்தும் மாறுதல் நிலையானதாகவும் நிரந்தரமானதாகவும் அமைதியானதாகவும் இருப்பது கஷ்டம். மனமாற்றமூலம் ஏற்படும் மாறுதல்களே சமூக ஐக்கியத்தை வளர்த்து முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். தானுகக் கனியவேண்டிய பழத்தைத் தடிகொண்டு அடித்துக்கனிய வைப்பது நல்லதல்ல; பழமும் சுவைக்காது.

சட்டம் துணைசெய்தாலும் ஆலயப்பிரவேசம் மற்றும் சமூகக் குறைபாடுகள் சமரச முயற்சிகளால் அமைதியான முறையில் நீக்கப்படவேண்டும். இதில் அவசரமோ ஆத்திரமோ, வெற்றிப்பெ மிதமோ சமுகத்துக்கு நன்மை செய்யமாட்டாது திரு. கதிரவேலுப்பிள்ளை விடுத்துள்ள [illegible] கோள் [illegible] எதிர்பார்ப் [illegible]

# நிம்மதியாக வார்ட்டில் தங்க பிச்சைக்காரர் ஆவல்

## 'நோயாளர்' நெருக்கடி; விபரம்தர பத்திரிகைகளுக்கு மறுப்பு

### டாக்டர்கள் நடவடிக்கையின் எதிரொலி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் நேற்று மட்டும் காலை 10 மணிவரை 35 நோயாளிகள் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர். வழக்கத்திலும் பார்க்க வெளிநோயாளரும் அதிகமாகக் காணப்பட்டனர்.

ஆஸ்பத்திரி முன் விருந்தையில் ஆண்களும் பெண்களுமாக திரள் திரளாகக் காணப்பட்டனர். அவர்களில் சிலர் தலையணை, பெட்சீட் முதலியன கொண்டு வந்திருந்தனர். டாக்டர்கள் வழமைபோல வெளி நோயாளரைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

டாக்ஸியில் கொண்டு வரப்படும் நோயாளிகள் உடனடியாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர். டாக்ஸிகள் ஒன்றன்பின் ஒன்ருக ஆஸ்பத்திரி வாசலினுல் உள்ளே சென்று கொண்டிருந்தன. தள்ளுவண்டியும் உடனுக்குடன் வந்து டாக்ஸியில் வந்த நோயாளிகளை ஏற்றிச் சென்றது.

காலை பத்து மணியளவில் ஒரு டாக்ஸியில் கொண்டுவரப்பட்ட வாலிபர் ஒருவர் உடனடியாகத் தள்ளுவண்டியில் ஏற்றப்பட்டு நேரடியாக டாக்டரிடம் கொண்டு செல்லப்பட்டு வார்ட்டில் உடனடியாக அனுமதிக்கப்பட்டார். அவ்வாலிபர் நச்சுத்திராவகம் அருந்தினுரென்று கூறப்பட்டது. அவ்வாலிபரின் தாயாரும் உறவினர்களும் ஆஸ்பத்திரி வாசலில் அழுது கொண்டிருந்தனர்.

பல், கண், சிகிச்சை நிலையங்களிலும் ஒரே கூட்டமாகக் காணப்பட்டது. மற்ருெரு வயோதிபர் டாக்ஸியில் கொண்டுவரப்பட்டார். அவரைக் கூட்டிவந்தவரிடம் 'என்ன வருத்தம்?' என்று கேட்டபோது, 'அவருக்கு வருத்தமொன்றுமில்லை, வீட்டில் அவரைக் கவனிக்க ஒருவருமில்லை. நேரத்திற்குச்சாப்பாடில்லை. அதனுல் வார்ட்டில்சேர்த்துவிட வந்தேன். நான் பக்கத்துவீட்டுக்காரன் என்ருர். அக்கிழவரையும்தள்ளுவண்டியில் ஏற்றிச் சென்றனர்.

வழக்கமாக பஸ்நிலையத்தில் காணப்படும் பிச்சைக்காரர் ஒருவரும் அங்குள்ள வாங்கொன்றில் உட்கார்ந்திருந்தார். அவரிடம் சென்று 'என்ன சுகவீனம்?' என்று கேட்டபோது, தனக்கு வருத்தமொன்றுமில்லையென்றும் இரண்டு மூன்று நாட்கள் நிம்மதியாக வார்ட்டில் இருந்துவிட்டுப் போக வந்திருப்பதாகவும் கூறினுர்.

தூரஇடத்திலிருந்து வந்த நோயாளிகளும், வார்ட்டில் இருந்து சிகிச்சை பெற வேண்டுமென்பதற்காகக் காத்திருந்தனர். நோயாளிகள் அதிகரித்திருப்பதால் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு மூச்சுவிடக்கூட நேரமில்லையென ஓர் ஊழியர் தெரிவித்தார்.

வெளிநோயாளர் பற்றிய புள்ளிவிபரங்களை பத்திரிகைகளுக்குக் கொடுக்க வேண்டாமென அங்குள்ள ஓர் உத்தியோகத்தர் ஆஸ்பத்திரி ஊழியருக்குத் தெரிவித்ததாக அறியப்படுகிறது வெளிநோயாளர்களின் புள்ளி விபரங்களை அங்குள்ள ஊழியரிடம் நான் கேட்டபோது அவர் சொல்ல மறுத்ததுடன் இது மேலிடத்தின் உத்தரவென்றும் என்னிடம் கூறினுர்.

ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் உள்ள படுக்கைகளிலும் பார்க்க சுமார் 150 நோயாளிகள் மேலதிகமாக இருப்பதாக ஊழியர் ஒருவர் தெரிவித்தார். சில வார்டுகளில் கட்டில்கள் கிடையாத நோயாளிகள் வெறும் நிலத்தில் படுத்திருக்கின்றனர். சிலர் படுக்கக்கூட வசதியில்லாது அருகருகில் அமர்ந்திருந்தனர்.

3-ம் வார்ட் விருந்தையில் நோயாளிகள் வரிசையாகப் படுத்திருந்தனர். 10-ம் வார்ட் விருந்தையிலும், 14-ம் வார்ட்டிற்கு உள்ளேயும் நோயாளர்கள் கீழே மிகமிக நெருக்கமாகப் படுத்திருந்தனர். நோயாளிகளைப் பார்க்கச் சென்றவர்கள் நடந்து செல்ல முடியாதவகையில் நோயாளிகள் அருகருகே நிலத்திலும் சிலர் பாயிலும் படுத்திருந்தனர்.

## விசேஷ பொங்கல்

உடுவில், திங்.

உடுவில் ஞானவைரவர் கோவிலில் விசேஷ பொங்கல், பூசைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. மாலையில் ஆசிரியை இராசலட்சுமியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றது. இசைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

[5-ம் கலத் தொடர்ச்சி]

வைதீகர் பலர் நம்மிடையே இன்னும் இருக்கிருர்கள். அவர்களுக்கு இப்படியான சமுதாய மாறுதல்கள் பிரியமில்லாமல் இருக்கலாம். ஆனுல் அவை தவிர்க்க முடியாதவை.

அதேபோல, முன்னேற்ற உணர்ச்சியுள்ள வாலிபர்கள் பலரும் நமதிடையில் இருக்கிருர்கள்.

இவர்கள் இருசாராரும் ஒருமித்து காலப்போக்கை உணர்ந்து சமரஸமாக வாழவேண்டும்.

வாழ்க, நம் தமிழ்மக்கள்!!

— வழிப்போக்கன்.

## பல் துறை நூல்

யாழ்ப்பாணம், திங்கள்

திருக்குறள் நீதிகளைப் போதிக்கும் உயர்ந்த நீதி நூலாகவும் வாழ்வுக்கு வழிகாட்டும் நூலாகவும் சொல்வளம் பொருள்வளம் மிக்க நூலாகவும் விளங்குகிறது. அரசியல், பொருளாதாரம் போதிக்கும் மேன்மையான நூலாகவிளங்குவதுடன் இல்லறத்தையும், கடவுள் பக்தியையும் போதிக்கும் அற நூலாகவும் குகிறது. இதனில் அமைந்துள்ள பொருளத்தனையும் ஓதிஉணர்ந்தவன் உலகில் மிகவும் சிறந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்படுவான்'' என அரியாலை நெசவுநிலைய மண்டபத்தில் அமைந்த சின்னப்புஅரங்கில் நடைபெற்ற திருவள்ளுவர்தின விழாவில் திரு. கு. ம. அப்புத்துரைபேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சி. துரைராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. நா. இராமலிங்கம் பேசுகையில் திருக்குறள் சமய நூலாகவும் நீதி நூலாகவும் எல்லோருக்கும் பொதுமறையாகவும் விளங்குகிறது என்று குறிப்பிட்டார்.

திரு. ச. நடராசா உட்படப்பலர் பேசினர்.

## பிரயாணிகளை ஏமாற்றும பஸ்கள்

யாழ்ப்பாணம், செவ்.

கொக்குவில்சந்தி—நாச்சிமார் கோவிலுக்கிடையில் உள்ள பஸ்தரிப்பில் உள்ள பிரயாணிகள் பஸ் கிடைக்காதனுல் மிகவும் கஷ்டப்படுகின்றனர் காலை எட்டு மணிச்குத் தங்கள் தொழில் நிலயங்களுக்குச் செல்ல விரும்பும் அவர்கள் 7-15 முதல் 7-45 வரை அவ் வழியால் பஸ் ஓடாததைக் கண்டு ஆச்சரியமும், ஏமாற்றமுமடைகின்றனர். 7-45 முதல் 9 மணிவரை செல்லும் பஸ்கள் இடமின்மை காரணமாக அவர்களை ஏற்ருது செல்வதே இதற்குக் காரணம். காலை 8-30க்கு குளப்பிட்டி ஊடாக வரும் ஆனைக்கோட்டை — யாழ்ப்பாணம் பஸ்ஸும் இடமின்மையால் இவர்களைவிட்டுச் செல்கிறதாம். இந்நிலைமை கடந்த ஒரு மாதகாலமாக நீடித்து வருகிறதாகவும் இதனுல் அப் பிரயாணிகள் 'பாதயாத்திரை'யாகவும், தனிப்பட்ட வாகனங்கள்மூலமும் பிரயாணம் செய்யவேண்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கோண்டாவில்

# இராமகிருஷ்ண வித்யாலயத்துக்கு மகாவித்தியாதிபதி பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

நாட்டில் நிலவும் உபஉணவுப் பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு மூன்று நாட்களில் 400 ரூபா மதிப்பிடக்கூடிய வேலையைத் துரிதமாகச் செய்தமைக்காக கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய ஆசிரியர்களையும், மாணவர்களையும் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும், மகாவித்தியாதிபதியுமான திரு. எம். ஜே. பெரேரா பாராட்டினுர்.

மேற்படி கல்லூரிக்கு நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக விஜயம் செய்ததிருபெரேராகல்லூரித் தோட்டத்துக்குச் சென்று பயிரிடப்பட்டிருந்தகிழங்கு, வெங்காயம், வாழை, மிள [illegible] பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஒரு காலத்தில் இப் பகுதிக்குத் தேவையான முழு உப உணவுப் பொருட்களையும் இவர்களே பயிரிட்டாலும் அது ஆச்சரியப்படக் கூடியதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. இராமசுவாமி தமது அறிக்கையில் ''இக் கல்லூரியில் மூன்ரும் வகுப்பு முதல் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றபோதிலும் தராதரமுள்ள ஆங்கில ஆசிரியர்களில்லாததால் மேல் வகுப்புகளில்திறமையாக ஆங்கிலம் கற்பிக்க முடியவில்லையென்றும் ஆதலால் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களை உடனடியாக நியமிக்குமாறும்'' கேட்டுக் கொண்டார். கல்லூரியின் வளர்ச்சி சம்பந்தமாகத் தான் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக திரு. பெரேரா அங்கு உறுதி கூறினுர். [ந. நி.

## நாட்டிலும் நகரிலும்

பூமி சுழலுகிறது! உலகம் சுற்றுகிறது! காலம் மாறுகிறது! எல்லாம் மாற்றமடைகிறது!

உலகமே மாற்றம்! மாற்றமே உலகம்!

இதை உணராதவன் புத்திமானல்லன்!

எந்த நிமிடமும், எந்த விநாடியும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இதுவே நியதி.

இதுதான் கடவுள் சட்டமே!

இதை நீங்கள் மறுக்கலாகாது! இதை நீங்கள் எதிர்த்து நீச்சலாடலாகாது!

சென்ற வாரத்தில் நிகழ்ந்த இரண்டு நிகழ்ச்சிகள் பலருடைய கண்களையும் திறந்திருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய சமுதாயப் புரட்சி நடந்துகொண்டிருக்கிறது. இதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவம். நம் போன்ற ஒரு மனிதன். அவன் தெருவில் வரும்போது பனங் காவோலை ஒன்றைப் பின்னுல் இழுத்துக்கொண்டு வரவேண்டும் என்று சமுதாயக் கட்டளை. ஏன் என்ருல் அவன் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவன். கீழ் மகன். அவன் வரும்போது காவோலை சத்தம்கேட்டால் பெரும் சாதி மக்கள் அவன் வருகை கேட்டு ஒதுங்கி நிற்பர்.

எவ்வளவு அற்பனத்தனம் பார்த்தீர்களா!

காலம் மாறுகின்றது! இருபத்தைந்தாண்டுகள் சென்றன! மனிதன் மாறிவிட்டான்! சமுதாயக் கோட்பாடுகள் திருந்தின! எத்தனை திருத்தங்கள், எத்தனை மாற்றங்கள்!

தோளில் சால்வை போட்டுக்கொண்டு வருபவன் அதைக் கக்கத்தில் எடுத்து இடுக்கி வைக்கிருன். மனிதனும் மனிதனும் சமானமல்லவா? ஏன் அவன் சால்வையைக் கக்கத்தில் இடுக்க வேண்டும்? இதென்ன அநீதி?

அவன் சேட் போடலாமா? கோட் போடலாமா?

போட்டால் என்ன? அவனுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம், ஐயா?

அவன் சேட் போட்டான், கோட்டுப் போட்டான்!

தாராளமாகப் போடட்டுமே! யார் வேண்டாமென்றது!

ஃ ஃ ஃ

பெரியதோர் சமுதாயப் புரட்சி இங்கே, இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இதை நாம் எவரும் மறுக்க முடியாது. இது இயற்கையின் நியதி, கட்டளை. மாற்ற முடியாதது. எதிர்நீச்சல் போடமுடியாது.

ஆனுல், இதில் ஒரு சிறிய விஷயத்தை நாங்கள் எல்லோரும் கவனித்துக் கொள்ளவேண்டும்.

மாற்றம்வரும்போது அதை நாம் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அது வரவேண்டியது, தவிர்க்க முடியாதது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாருமே மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். வென்றவர்கள் அந்த வெற்றியைக் கொண்டு பெருமிதம் அடையலாகாது. மற்றவர்கள் பெருந்தன்மையுடன் 'சகோதரர்களே! வாருங்கள்!' என்று அழைத்துக்கொள்ள வேண்டும்.

[3-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெற்ருலன்றி மேற்கு ஆசியாவில் தீர்வு காண முடியாது

## ஜோன்சனுடன் உடன்பாட்டுக்கு வர தவறிவிட்டதாக கொஸிஜின் அறிவிப்பு

நியுயோர்க், ஜூன் 26

**நேற்று கிளாஸ்பரோவில் அமெரிக்க ஜனதிபதி ஜோன்சனுக்கும் ரஷ்யப் பிரதமருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின் பத்திரிகை மகாநாடொன்றில் பேசுகையில், ''இஸ்ரேல் துருப்புகள் வாபஸ்பெறுவதையிட்டு ஓர் உடன்பாட்டுக்கு வரத் தவறிவிட்டதாக'' திரு. கொஸிஜின் அறிவித்தார்.**

**ஐ. அ. குடியரசு, சிரியா, ஜோர்டான் பிராந்தியங்களிலிருந்து, இஸ்ரேல் தனது துருப்புகளைப் போர் தொடங்குமுன், ஜூன் 4-ம் திகதியிருந்த நிலைகளுக்கு வாபஸ்பெற வேண்டுமென்ற விஷயத்தில் திரு. ஜோன்சனும் தாமும் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை என திரு. கொஸிஜின் கூறினர்.**

**ஆனலும் ஆபத்து நிறைந்த உலகப் பிரச்னைகள்பற்றி இரு தலைவர்களும் இடைவிடாது தொடர்பு கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.**

''இஸ்ரேல் தனது துருப்புகளை ஜூன்4-ந் திகதியிருந்த நிலைகளுக்கு வாபஸ் பெருவிடில், அப்பகுதியில் மீண்டும்போர் ஏற்படும் நிலைமை இருக்கும். இஸ்ரேல் துருப்புகளின் வாபஸுக்குப் பின்தான் மற்றைய பிரச்னைகள் எதுவையும் தீர்க்கமுடியும்'' என்று சோவியத் பிரதமர் கொஸிஜின் கூறினர்.

### யூதர் எதிர்ப்பு கிடையாது

மேற்கு ஆசியப் போரைத் தொடர்ந்து, ரஷ்யாவில் யூதர் எதிர்ப்பு அதிகரித்திருக்கிறதா என்ற கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் ''இந்தக் கேள்விக்குஇடமேயில்லை. ரஷ்யாவிலுள்ள யூதர்கள், இதர சமூகத்தினருக்குரிய சகல உரிமைகளும் பெற்று வாழ்கின்றனர்'' என்று ரஷ்யப் பிரதமர் குறிப்பிட்டார்.

### விசேஷ பங்கு ஆற்ற இடமில்லை

உலகப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் விசேஷ பங்கினை ஆற்ற ஏதாவது உடன்பாட்டுக்கு வந்துள்ளனவா என அவரைக் கேட்டபோது, ''இவ்விரு நாடுகளும் தனிப்பட்ட, விசேஷ பங்கெதுவும் ஆற்றுவதற்கு இடமில்லை. உலகப் பிரச்னைகளைச் சகல நாடுகளும் சேர்ந்தே தீர்த்து வைக்க வேண்டுமென்பதே எமது கொள்கை'' என்று அவர் பதிலளித்தார்.

மேற்கு ஜெர்மனிக்கு அணுஆயுதங்கள் கிடைக்க வழிவகுப்பதை ரஷ்யா எதிர்ப்பதாகப் பிரதமர் கொஸிஜின் தெரிவித்தார். ''மேற்கு ஜெர்மனிக்கு அணுஆயுதங்கள் கிடைப்பதை நாம் முழுமூச்சுடன் எதிர்ப்போம்'' என்ருர் அவர்.

### சீனவின் குண்டு

சீன ஜலவாயுக் குண்டு வெடித்ததுபற்றிக் கேட்டபோது, ரஷ்யா எந்தக் குண்டு வெடிப்புக்குமே எதிரானதே என்று கூறினர் கொஸிஜின். ஜலவாயுக் குண்டை இப்போது சீன வெடித்துள்ளதால்மாஸ்கோ ஒப்பந்தத்தில் அதுவும் கைச்சாத்திட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

### வியட்னும்

வியட்னும் பற்றிக் குறிப்பிடுகையில், அங்கிருந்து அமெரிக்கா தனது துருப்புகளை வாபஸ் பெற்று, வட வியட்னும் மீதான குண்டு வீச்சையும் நிறுத்தினலன்றி வியட்னும் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாதெனக் கொஸிஜின் கூறினர். வியட்னமில் ஒரு தீர்வு ஏற்பட்ட பிறகுதான் ரஷ்ய-அமெரிக்க உறவுகளும் மேம்பட வழிபிறக்குமெனவும் அவர் தெரிவுத்தார்.

## 'ஆழ்ந்த வித்தியாசங்கள் இருப்பதாக உணர்வு'

''எமது பேச்சுவார்த்தைகளின்போது எமது இரு நாடுகளுக்குமிடையே ஆழ்ந்த வித்தியாசங்கள் இருப்பதை அறிந்து கொண்டேன்'' என்ருர்கொஸிஜின்.

ஜோன்சனுக்கும் கொஸிஜினுக்குமிடையே நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நாலரை மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தன. முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 5 மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்திருந்தன.

பேச்சுவார்த்தைகள்பற்றி அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் அபிப்பிராயம் தெரிவிக்கையில், ''இரு நாடுகளும் ஒன்றையொன்று பரஸ்பரம்அறிந்து கொள்வதற்கு இப்பேச்சுவார்த்தைகள் உதவின. பல பிரச்னைகளை நாம் அதிகம் ஆழமாகஅலசி ஆராய முடிந்தது. பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாகவே அமைந்துள்ளன'' என்று கூறினர்.

ஜோன்சனின் இக்கருத்துகளுடன் தான் உடன்படுவதாகக் கொஸிஜின் தெரிவித்தார். பல பிரச்னைகளையிட்டும் இருநாடுகளினதும் நிலைகளை ஒப்பிட்டுப் பார்க்க முடிந்ததாக அவர் கூறினர்.

### ஆறுதலாக நடைபெற்றன

இரு தலைவர்களுக்குமிடையே வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை விட, நேற்றிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஆறுதலாக ஆரம்பமாகித் தொடர்ந்தன. முதல் 2 மணித்தியாலங்களும்சம்பாஷணையிலும், போசனத்திலேயும் கழிந்தன.

நேற்றைய பேச்சுவார்த்தைகள், சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றன. முன்னதாக ஜோன்சனும் அவரது மனைவியும் மகளும், ரஷ்யப் பிரதமர் கொஸிஜினையும் அவரது மகளையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் இங்கு திரும்பி வருவது, எனது சொந்த வீட்டுக்கு வருவது போல் இருக்கிறது' என்று புன்சிரிப்புடன் கூறினர் கொஸிஜின்.

### குரோமிக்கோவும் ரஸ்கும்

இன்று கொஸிஜின் மாஸ்கோவுக்குத் திரும்புகிருர். அவர் புறப்பட்டுச் சென்ற பின், அமெரிக்க ராஜாங்க பாதுகாப்பு மந்திரி திரு. டீன் ரஸ்கையும், ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிகோவையும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடாத்துமாறு ஜோன்சனும், கொஸிஜினும் பணித்துள்ளனர்.

## பொட்கோர்ணி-நாஸர் உச்சி மாநாடு

### மாஸ்கோ அறிக்கை

மாஸ்கோ, ஜூன் 26

சோவியத் அதிபர் பொட்கோர்ணிக்கும் ஐ. அ. குடியரசு ஜனதிபதி நாஸருக்குமிடையே கெய்ரோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள்பற்றிய உத்தியோக பூர்வமான அறிக்கை ஒன்று நேற்று இங்கு வெளியிடப்பட்டது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பினல் ஏற்பட்டுள்ள விளைவுகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அந்த அறிக்கையில்வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனல் இந்தநடவடிக்கைகள் என்ன என்று அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

ஐ.அ.குடியரசுக்கு ரஷ்யா இராணுவ உதவி அளிக்கஒப்புக்கொண்டுள்ளதாக மட்டும் தெரிய வருறது.

## இந்திரா - முக்கர்ஜி பேச்சுவார்த்தைகள்

புதுடில்லி, ஜூன் 26

மேற்குவங்காளமுதன் மந்திரி திரு. அஜோய் முக்கர்ஜியுடன் தாம் நடத்தியபேச்சுவார்த்தைகள் பற்றி பிரதமர் இந்திரா காந்தி, காங்கிரஸ் .காரியக்கமிட்டிக்கு அறிவித்துள்ளார்.

மேற்கு வங்காள ராஜ்யத்தில் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்தவும் நக்ஸல்பாரிஸ் நிலைமையைச் சமாளிக்கவும்தம்மால்முடியுமெனப் பிரதமரிடம் திரு. முக்கர்ஜி தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

உணவு பற்ருக்குறை தீர்க்கப்பட்டால், ராஜீயத்தில் சட்டமும் ஒழுங்கும்நிலவும் என்ற கருத்தை முதல் மந்திரி திரு.முக்கர்ஜி வெளியிட்டிருந்தாராம்.

### 20பேர் கைது

இதற்கிடையில், ஹூக்லி மற்றும் இரண்டு மாவட்டங்களில, உணவுச்சட்டங்களை மீறிய குற்றத்துக்காக 20 பேரை மேற்கு வங்காளப் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

## ஐ. நா. சபைக் கூட்டம்

### ஜோர்தான் மன்னர் பேசுகிருர்

நியுயோர்க், ஜூன் 26

மேற்கு ஆசியா பற்றிய விவாதம் இன்று மாலை, ஐ. நா. பொதுச்சபையில் மீண்டும் விவாதிக்கப்படும்.

ஜோர்தான் மன்னர் ஹுஸெயின் இன்றைய கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

### இஸ்ரேல் நிலை

இதற்கிடையில், இஸ்ரேலுடன் அரபுநாடுகள் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினலன்றி, மேற்கு ஆசியாவில் நிலவும் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாதென இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கோல் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

### ஜோர்தானுக்கு கப்பல்கள்

நேற்று, திரான் ஜலசந்தியினூடாக நான்கு கப்பல்கள் ஜோர்தானுக்குச் சென்றன. ஜலசந்தியின் ஒரு பகுதியில் நிலைகொண்டுள்ள இஸ்ரேல் துருப்புகளின் குறுக்கீடு எதுவுமின்றி இக்கப்பல்கள் ஜோர்தான் போய்ச் சேர்ந்தன. கப்பல்கள் நிறுத்தப்படவோ, சோதனைக்கு உட்படுத்தப்படவோ இல்லை. இக்கப்பல்கள் உணவு மற்றும் பொருட்கள் கொண்டுசென்றன.

---

## கடும் புயலினல் 30 பேர் மரணம்

பாரிஸ், ஜூன் 26

வட-மேற்கு பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளில் நேற்று வீசிய கடும் புயலின் விளைவாக 30 பேர் மாண்டனர். நூற்றுக்கணக்கானேர் வீடிழந்து தவிக்கின்றனர்.

## லண்டன்,மாஸ்கோவில் இந்திய ராஷ்டிரபதி

லண்டன், ஜூன் 26

கனடாவுக்குச் செல்லும் வழியில் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயின், நேற்றிரவு லண்டன் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் வைத்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காரியதரிசியும், லண்டனிலுள்ள இந்தியத் தூதுவரும் வரவேற்றனர்.

பத்திரிகையாளரிடம் பேசுகையில், இந்தியாவின் சில பகுதிகளில் ஏற்பட்ட வரட்சி இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக டாக்டர் ஹுசெயின் கூறினர்.

அண்மையில் வரட்சிப் பகுதிகளில் பெய்துள்ள நல்ல மழை நம்பிக்கைதருவதாக அமைந்துள்ளதாகவும், பெருமளவில் வரட்சி நிவாரண நடவடிக்கைகள் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ராஷ்டிரபதி மேலும் கூறினர்.

### சூயஸ்

சூயஸ்கால்வாய் மூடப்பட்டதால் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளதா என்று அவரிடம் கேட்கப்பட்டபோது இந்தியாவுக்கு அதனல் சில கஷ்டங்கள் இருந்தபோதிலும், அவற்றை அதனல் சமாளிக்கமுடியுமென அவர் தெரிவித்தார்.

### இந்திய மாணவர்கள்

இங்கிலாந்தில் பயிற்சிபெறும் இந்திய மாணவர்களுக்கு விடுத்த செய்தியொன்றில், அவர்கள் மீது பெரும் நம்பிக்கையைத் தாம் வைத்துள்ளதாக டாக்டர் ஹுசெயின் தெரிவித்துள்ளார். அவர்கள் நல்ல முறையில் பயிற்சிபெற்றுத் திரும்பி, தமது தாயகத்துக்குச் சேவைபுரியவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

### மாஸ்கோவில்

முன்னதாக, ராஷ்டிரபதியின் விமானம், மாஸ்கோ விமானநிலையத்தில் சிறிது நேரம் தங்கியது. அந்த

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆங்கிலம்முக்கிய மொழி"

உடுப்பிட்டி, திங்கள்

மாணவர்கட்கு கல்விய றிவு இருந்தால் மட்டும் போதாது. மாணவர்களின் வாழ்க்கைக்கு உடற்பயிற்சி இன்றியமையாதது. பிள்ளைகள் பாடசாலைக்கல்வியோடு இருந்துவிடாது உடலுழைப்பிலும் முன்னேற்றமடைய வேண்டும். இன்று ஆங்கில மிகவும் இன்றியமையாத மொழியாகவிளங்குகின்றது. பாடசாலைகளில் ஆங்கிலமும் ஒரு பாடமாகக் கற்பிக்கப் படவேண்டும்.'' என்று யாழ் மாவட்டஅரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் இல்லங்கட்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

இப்போட்டிகளுக்குக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிறிநிவாசன் தலைமைவகித்தார் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்குத் திருமதி அபயசேகரா பரிசில்கள் வழங்கினர். அஜந்தாஇல்லம் முதலிடம் பெற்றது.

## மருந்தகம் அமைக்க வற்புறுத்து

கோப்பாய், திங்கள்

நீர்வேலியில் மத்தியமருந்தகமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற் கொள்ள வேண்டுமென்று கோரும் மகஜரொன்றை நீர்வேலி பொதுநல அபிவிருத்திச்சங்கச்செயலாளர் திரு. வே. சின்னத்துரை கோப்பாய்எம். பி. திருசி. கதிரவேற்பிள்ளையிடம் சமர்ப்பித்துள்ளார்.

நீர்வேலியில் ஒரு மத்திய மருந்தகம் நிறுவும் விஷயம் யாழ். மாவட்ட சுகாதார இணைப்புக்குழுவினல் அங்கீகரிக்கப்பட்டும் இதுபற்றிய சுகாதாரமந்திரியின் முடிவு இதுவரை வெளிவராததேமருந்தகம்அமைப்பதில்தாமதத்திற்குக் காரணமாகும். எனவே இது சம்பந்தமாக மேலும் தாமதமேற்படாதிருக்கதுரிதநடவடிக்கைஎடுக்கவேண்டுமென்றும், சில பிரமுகர்கள்மருந்தகத்திற்கான நிலம், கட்டிடங்களை வழங்க முன்வந்திருப்பதாகவும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## சேவாமன்றம் அங்குரார்ப்பணம்

திருக்கேதீஸ்வரம், செவ்.

பலகிராமங்களிலும் பல நூற்றுக்கணக்கான மன்றங்களிருக்க திருக்கேதீஸ்வரத்தில் சேவையாற்ற ஒருமன்றம் இதுவரைஇல்லாதிருந்த குறை நீக்கப்பட்டதாக இங்கு நடைபெற்ற திருக்கேதீஸ்வரத்தில் 'சிவமணிசேர் கந்தையா வைத்தியநாதன் மன்றம்' அங்குரார்ப்பணக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மன்றத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. அ. திருநாவுக்கரசு, உபதலைவர்: திரு. கு. காமாட்சிபிள்ளை, செயலாளர்: திரு. ந. கதிர்காமத்தம்பி, பொருளாளர்: திரு. ஆ. பொன்னையா. நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் க. தியாகராசா, நா. பொன்னையா, சோமபாலா. பிருந்தாவனநாதன், டி. எல். பாண்டியனர் ஆகியோரும் கணக்குப் பரிசோதகராக திரு. கே. நடராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சிறந்த விவசாயி பரிசு பெறுவார்

வவனியா, செவ்.

''வவனியாப் பகுதியில் உள்ள குளத்தின்தண்ணீரை தகுந்த முறையில் பாவித்தால் சிறுபோகம், இடைப்போகம் போன்றவை விதைத்து கூடிய நெல்லையும் உற்பத்தி செய்யலாம். ஆனால் பெரும்போகத்திலே தண்ணீர் முழுக்கச் செலவழிப்பதால் சிறுபோகம் செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. இந்த நிலையை 1967—1968-ம் ஆண்டு காலபோகத்தில் நீக்கி தண்ணீரைச்சேமித்து சிறுபோகமும் செய்ய வேண்டும். எல்லா உத்தியோகத்தரும் இதை அமுல்செய்ய முன்வரவேண்டும்'' என்று வவனியா தெற்கு தமிழ் பிரிவின் 1967—68-ம் வருட காலபோகச் செய்கைக்கான திட்டங்களை வகுக்குமுகமாக வவனியாக் காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம் தமது பகுதியில்உள்ள விவசாய உத்தியோகத்தரைக் கொண்ட மகாநாட்டில் பேசுகையில் கூறினர். உணவு உற்பத்தியைப் பெருக்குவதுபற்றிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதுடன் சிறந்த விவசாயிகளுக்குப் பரிசு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## தமிழில் சேமிப்புவங்கி அறிக்கை

கொழும்பு, திங்கள்

இலங்கைச் சேமிப்பு வங்கியின் 35-வது வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தலும் 1966-ம் ஆண்டறிக்கையும் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

1966-ம் ஆண்டறிக்கையில் பண வைப்பாளர்களின் பிரதிநிதியொருவர்சபைக்கு நியமிக்கப்படுதல் பற்றியும், நிரந்தர முகாமையாளர், வீட்டு உடைமைக் கடன்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டு கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 87,748 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.

## மண்வெட்டி போதாது

பண்டத்தரிப்பு, திங்.

இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 108 மண்வெட்டிகள் கிடைத்துள்ளன. இவை கடந்த வருடம் வெங்காயம் பயிரிட்டு சங்கத்திற்கு கொடுத்தவர்களுக்கே வழங்கப் படவிருக்கின்றன. மண்வெட்டி வேண்டும் என்று அதிகமானேர் விண்ணப்பம் செய்திருந்த போதிலும் இவ்வளவு தொகையே தற்போது கிடைத்திருப்பதால் எப்படி கொடுப்பதென்பது ஒரு பெரும் பிரச்னையாக விருப்பதாக அறியப்படுகிறது.

### லண்டன் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் பேசுகையில், தாம் ஜனதிபதியாகப் பதவியேற்றபின் மிதிக்கும் முதலாவது மண், இந்தியாவுடன் நெருங்கிய நட்புறவுபூண்ட ஒருநாட்டின் மண் என்பதையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாக இந்திய ராஷ்டிரபதி கூறினர்.

**பாராட்டு**

இந்திய உபகண்டத்தில் சமாதானத்தை நிறுவ ரஷ்யா எடுத்துவரும் முயற்சிகளை அவர் பாராட்டினர். தாஷ்கெண்ட் ஒப்பந்தத்தை இந்தியா மதித்து நடக்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

ராஷ்டிரபதியின் விமானம் மேலே பறந்துசென்ற நாடுகளான பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சோவியத்யூனியன், நெதர்லாண்ட்ஸ் ஆகியவற்றின் அதிபர்களுக்கு டாக்டர் சாகீர் ஹுசெயின் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 27 - 6 - 67**

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 குரல்வகை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 வீணை—லீலாவதி இரத்தின சிங்கம், 7-45 யுனெஸ்கோ [illegible] 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாத [illegible] 10-15 தேர்ந்த இசை.

## மண்டைதீவு இளைஞர் முன்னேற்றக் கழகம்

யாழ்ப்பாணம், திங்.

மண்டைதீவு இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 6வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. சி பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை தண்ணீர் விநியோகம், அம்மன் கோவில் வீதி அமைத்தல், விவசாய விஸ்தரிப்பு மற்றும் கிராம அபிவிருத்தி முதலியன பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சி. பாலசிங்கம், உப தலைவர்: சி. சற்குணநாதன், செயலாளர்: செ. நடராசா, உப செயலாளர்: க பேரின்பநாதன், பொருளாளர்: செ. தருமராசா. எண்மர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## முதலாவது கூட்டம்

யாழ்ப்பாணம், திங்.

ஜனநாயக உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 23-ம் திகதி யாழ் நகரமண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. எம். வேலுப்பிள்ளை, உப-தலைவர்கள்: திரு. ரி. ஏ. ஜெயா, திரு. ரி. நவரத்தினராஜா, செயலாளர்: திரு. பி. பரமநாதன் உப-செயலாளர்: திரு. பி. ஞானப்பிரகாசம், பொருளாளர்: திரு. பி. விஜயபாஸ்கரன், உப-பொருளாளர்: திரு. கே. சண்முகநாதன். 9 பேர் கொண்ட நிர்வாகக்கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. [ந. நி]

## நிதிமந்திரியை சந்திப்பர்

யாழ்ப்பாணம், செவ்.

உற்பத்தி வரி சம்பந்தமாக இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தூது கோஷ்டி ஜுலை மாதம் 2-ம் திகதி நிதி மந்திரிதிரு. யு. பி. வன்னிநாயக்காவைப் பேட்டிகாணவிருக்கிறது.

10 பேரடங்கிய இத்தூது கோஷ்டி உற்பத்திவரியினுல் தொழிலாளருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தைக் கூறி அதனை ரத்துச் செய்யும்படி மந்திரியைக் கோருமெனத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், நிதி மந்திரியைச் சந்தித்து இத் தூதுக் கோஷ்டியின் பேட்டிக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.


'கஸ்தூரிமோதகய'




இழந்த வாலிபத்தைத் திரும்பத் தரும் சஞ்சீவி

இளமையிலேயே முதுமை அடைந்தது போன்ற உணர்ச்சி, வாலிபர்களுக்கும் மணமானவர்களுக்கும் ஏற்படும் பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, கனவிலும், மூத்திரத்துடனும் பலஹீனமடைதல், பயம், வெட்கம், வாழ்க்கையில் வெறுப்பு, பற்பல மூத்திராசய வியாதிகள், கை—கால் நடுக்கம், கெட்ட கனவுகள், பசியின்மை ஆகிய வியாதிகளைப் போக்கி, உடல் பலத்தையும் வீரியத்தையும், இளமை உணர்ச்சியையும் திரும்பத்தரும் சஞ்சீவி.

பத்தியம் இல்லை.

விலை ஒரு ருத்தல் ரூ. 15-00
அரை '' ரூ. 8-00
தபால் செலவு வேறு.

N. B.
இத்துடன் ''விட்டால் லேகியம்'' என்ற மருந்தையும் இரவு மட்டும் பாவித்து வந்தால் மலச்சிக்கலை அடியோடு மாற்றுவதுடன், இம் மருந்தின் பலனைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும்.

விலை—1/4 ருத்தல் ரூ. 2-50

வடமாகாண ஏஜன்டுகள்:-
எஸ். சுப்பிரமணியம் & கோ, 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
க. செ. கணபதிப்பிள்ளை & சன்ஸ், 51, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
ஆ. இராசையா & சன்ஸ், 69, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:-
எஸ். என். குரு மெடிக்கல் ஹால
80, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.








பள்ளிக்கூடம் போகிறுன்

ஜேம்ஸன் காற்சட்டை அணிந்து



நீலம், வெள்ளை, காக்கி (உறுதியான பொக்கெட்டு களுடன்)

சிக்கன ரகம் — அளவு 20-22; 6/50; 24 - 7/25; 26 - 8/00; 28 - 9/25.
ஸ்டான்டர்ட் — [பி 11 நீல, காக்கி ட்றில்] அளவு 20-22; 7/50; 24 - 8/25; 26 - 9/00; 28 - 10/25;
பெரியவர்களுக்கு அளவு 30-38; 11/25;

யாழ்ப்பாணத்தில் — தயராம்ஸ் தோலராம்ஸ் பொகுமால்ஸ் கடைகளில் கிடைக்கும்

வியாபார விசாரணைகள்:
லக்கி ஃபைவ் இன்டஸ்றீஸ்
155, பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்: 3184


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

ஆறு பரப்புக் காணியும், புதிய கல்வீடும், இளந் தென்னைகளும், கிணற்றுடன், யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் கண்டி றேட்டில், பஸ் தரிப்பு நிலையத்தருகில் விற்பனைக்கிருக்கிறது. அரிசி, மில், நெசவுதொழிற்சாலை, மாட்டுப்பண்ணை, கோழிப் பண்ணை முதலியன நடாத்த மிகப் பொருத்தமானஇடம். விபரங்களுக்கு- எஸ். இரத்தினசிங்கம், 91, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2470

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை மாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது. யாழ். மாவட்ட உதவிஅரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார்.

## வேலை அனுபவப் பயிற்சி

பொல்காவலை, திங்கள்

பொல்காவலையில் உள்ள மத்திய மகாவித்தியாலயம், புனித பேர்ளுட் கல்லூரி ஸி.ஸி. உயர்தர தமிழ் வித்தியாலயம் முதலிய கல்லூரி மாணவ, மாணவிகள் வேலை அனுபவப்பயிற்சித் திட்டத்தில் ஈடுபட்டார்கள். மேடு பள்ளமான விளையாட்டிடங்களைச் சமப்படுத்தியும், கட்டிடங்களுக்கு வெள்ளையடித்து மைபூசியும், கம்பி வேலிகள் போட்டும் தங்கள் முயற்சித்திறனை வெளிப்படுத்தினார்கள். உச்சி வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும், காயங்கள் ஏற்பட்டும் விடாமுயற்சியுடன் இவர்கள் வேலை செய்தனர். இதனால் அரசாங்கத்துக்குப் பல ஆயிரம் ரூபா மிச்சப்படுத்தப்பட்டது.

## 'வெலிங்டன் தளபதியின் வெற்றிக்கு விளையாட்டு பயிற்சியே காரணம'

### ஏழாலை மகாவித்யாலய விளையாட்டு போட்டி முடிவுகள்

சுன்னுகம், திங்கள்

''மாணவ, மாணவிகள் விளையாட்டுத்துறையிலும் ஈடுபடவேண்டும். வாட்டர் யுத்தமுனையில் வெலிங்டன் தளபதி வெற்றி பெற்றதன் காரணம் ஈற்றன் கலாசாலை விளையாட்டு மைதானமே. விளையாட்டு மைதானம், மாணவர்கள் ஒருவரை ஒருவர் நன்குபுரிந்துகொள்ளவும் சகோதரமனப்பான்மை ஏற்படவும் வழிவகுக்கிறது'' என்று ஏழாலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கல்லூரி அதிபர் திரு. சு. அம்பலவாணர் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு காங்கேசன்துறை பொலிஸ் உதவி அதிகாரியும், ஸ்கந்தவரோதயா விளையாட்டு ஆசிரியர் திரு. அ. முருகையாவும் கலந்துகொண்டனர்.

நீலஇல்லம், மஞ்சள் இல்லம், சிவப்பு இல்லம் ஆகியன முறையே 1-ம், 2-ம், 3-ம் இடங்களைப் பெற்றன.

விளையாட்டுப் போட்டியில் பரிசுபெற்ற மாணவ மாணவிகளின் விபரங்கள்.

மேற்பிரிவு ஆண்கள் 100 யார் ஓட்டம்: க. காளிதாசப்புலவர், க மார்க்கண்டு, த. சிவபாதம்.

மத்திய பிரிவு ஆண்கள் 100 யார் ஓட்டம்: க. திருச்செல்வம், ச. தர்மலிங்கம், ந. கிருஷ்ணமூர்த்தி.

மேற்பிரிவு பெண்கள் 220 யார் ஓட்டம்: ச. இந்திராணி, த. சந்திரபூபதி, அ. மல்லிகாராணி.

மேற்பிரிவு பெண்கள் 100 யார் ஓட்டம்: த. சந்திரபூபதி. ச. இந்திராணி, அ. மல்லிகாதேவி.

மத்திய பிரிவு பெண்கள் 220 யார் ஓட்டம்: ந. செல்வராணி, சி செல்வராணி, சா. கோகிலாதேவி.

மத்திய பிரிவு பெண்கள் 100 யார் ஓட்டம்: ந. செல்வராணி, ச நாகபூரணி, மு. புஷ்பராணி

மேற்பிரிவு ஆணகள் 440 யார் ஓட்டம்: ச. அரியரத்தினம், சி. திருச்செல்வம். சி. பஞ்சலிங்கம்.

மத்திய பிரிவு ஆண்கள் 440 யார் ஓட்டம்: ந. கிருஷ்ணமூர்த்தி, ப. இரத்தினம், இ. அருணகிரிநாதன்.

மேற்பிரிவு ஆண்கள் 200 யார் ஓட்டம்: க. காளிதாசப்புலவர், த. சிவபாதம், ச. வெற்றிவேலாயுதம்.

மேற்பிரிவு ஆண்கள் 880 யார் ஓட்டம்: பொ. குழந்தைவேலு, சி. அருளானந்தம், ச. அரியரத்தினம்.

மத்திய பிரிவு ஆண்கள் 200 யார் ஓட்டம்: க. திருச்செல்வம், ச. தர்மலிங்கம், ப. இரத்தினம்.

மேற்பிரிவு ஆண்கள் ஒரு மைல் ஓட்டம்; சி. அருளானந்தம், த. சிவபாதம், சி. ஈஸ்வரலிங்கம்.

வேறு பல விளையாட்டுகளும் இடம்பெற்றன.

## இணைப்புக் குழு விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட இணைப்புக்குழுவின் விசேஷ கூட்டமொன்று அடுத்த மாதம் 3-ம் திகதி அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கிறது. பொது வேலைப் பகுதி டைரக்டர் திரு. வி. சி.டி. சில்வா விசேஷமாகக் கலந்து கொள்ளவிருக்கிறார். இக் கூட்டத்தில்முக்கியமாக யாழ்ட்பாணம் புதிய மார்க்கட் கட்டடம் பற்றி ஆராயப்படுமெனத் தெரிகின்றது [ந. நி.]

## இடமாற்றம

சங்கானை, திங்கள்

சங்கானை கிழக்கு கிராம சேவகர் திரு. அ. வேதநாயகம் அடுத்த மாதம் தொடக்கம் பெரிய விளானுக்கும், பெரிய விளானில் கடமையாற்றும் கிராமசேவையாளர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி சங்கானை கிழக்கிற்கும் மாற்றம் பெற்றுள்ளனர்.

## விளம்பரம

### கேள்வி விளம்பரம்

#### சின்னப்பூவரசங்குளம் துவரநேரி அனந்தர்புளியங்குளம் றேட்டு வேலை

1967-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் திகதி நண்பகல் வரை கி. ச. அக்கிராசனரால் மேற்படி றேட்டு வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பணமாக ரூபா 60/- செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் கேள்வி தயாரிக்கப்படவேண்டும். பத்திரப்பணமாக ரூபா 25/- செலுத்தப்படவேண்டும். இப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. இவை விண்ணப்பிக்கும் அதே நேரத்தில் வவுனியா உ. உ. ஆணையாளர் அவர்களுக்கும் இதன் நகல் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்படவேண்டும். 9-7-67 நண்பகல் வரை எனது அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். விபரமெதுவும் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சி. உ. செல்லத்துரை
கிராமசபை அக்கிராசனர்.

கி. ச. அலுவலகம்,
நயினமடு, நெடுங்கேணி.
24-6-67. 2378

### ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி திரு. எஸ். கனகசபை J. P. அவர்களிடம் 1-1-65 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 11-7-67செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ குட்டிப்பிள்ளை
2376 ஏலவிற்பனவாளர்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### கேள்வி விளம்பரம்

#### நயினமடு ஐயன்கோவில் றேட்டு வேலை

1967-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் திகதி நண்பகல் வரை கி. ச. அக்கிராசனரால் மேற்படி றேட்டு வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பணமாச ரூபா 90/- செலுத்தியதன் பேரில் வழங்கப்பட்ட பத்திரங்களில் கேள்வி தயாரிக்கப்பட வேண்டும். பத்திரப்பணமாக ரூபா 25/- செலுத்தப்படவேண்டும். இப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. இவை விண்ணப்பிக்கும் அதே நேரத்தில் வவுனியா உ. உ. ஆணையாளர் அவர்களுக்கும் இதன் நகல் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்படவேண்டும். 9-7-67 நண்பகல் வரை எனது அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். விபரமெதுவும் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சி. உ. செல்லத்துரை
கிராமசபை அக்கிராசனர்.

கி. ச. அலுவலகம்,
நயினமடு, நெடுங்கேணி.
24-6-67. 2379

### விளம்பரங்கள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண வீதிகளில் உள்ள மரங்களிலும், தந்திக் கம்பங்களிலும், மின்சாரக் கம்பங்களிலும் கட்டப்பட்டிருந்த சினிமா விளம்பரங்கள், வர்த்தக விளம்பரங்கள் அனைத்தும் நேற்று யாழ்ப்பாண மாநகரசபையினரால் திடீரென அகற்றப்பட்டன.

இந்த விளம்பர ஸ்தாபனங்கள் மாநகரசபை ஆணையாளரின் உத்தரவின்றி இவைகளைக் கட்டியிருந்ததாலேயே இவைகள் அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அகற்றப்பட்ட விளம்பரத் தட்டிகளும், தகர விளம்பரங்களும் கழற்றி மாநகரசபை வாகனங்கள் மூலம் மாநகரசபைக்கு எடுத்துச்செல்லப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெற்றியில் அடக்கமும் அமைதியும் அவசியம்"

## ஆலயப்பிரவேச வழக்கு தீர்ப்பு பற்றி கோப்பாய் எம். பி. அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

செல்வசசன்னிதி ஆலயப் பிரவேச வழக்கில் வழக்காளிகள் சார்பில் ஆஜராகிய கோப்பாய் எம். பி. யும் அப்புக்காத்துமான திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பின்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:-

செல்வச்சந்நிதி ஆலயப் பிரவேச வழக்கின் தீர்ப்பு சைவசமயத்துக்கு வெற்றியும் சாதிப் பாகுபாட்டுக் கொடுமைக்கு தோல்வியுமாகும். வழக்கு வெற்றி காரணமாக எவரும் அவசரப்பட்டு ஆலயங்களுக்குள் பிரவேசிக்கக் கூடாது. வெற்றியில் அடக்கமும் அமைதியும் அவசியம். இன்னும் சமரச முயற்சிகளைக் கையாண்டு சமாதானமாகவே ஊர்மக்கள் ஆலயபரிபாவனம் செய்யும் பெரியார் முதலியோருடைய சம்மதத்துடன் ஆலயப் பிரவேசம் செய்ய வேண்டும். அதற்கான பழக்க வழக்கம், ஆசார ஒழுக்கம் முதலியவற்றை நன்கு அறிந்து அனுசரித்து வழிபாட்டிற்குச் செல்ல வேண்டும். வழக்குத் தீர்மானம் சாதியால் ''குறைந்தவர்'' என்று கருதப்படுபவருக்கு பிரத்தியேக வெற்றி என்று நினைப்பது பிழையான சிந்தனையாகும். இதனை சமயத்தின் உயர்ந்த இலட்சியங்களுக்கு ஒரு வெற்றி என்று எல்லாரும் கருதவேண்டும்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
பேரயாதினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
தங்கத் தம்பி

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Richard Widmark &
Rosanna Schiaffino
in
THE LONG SHIP

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
குமரிப் பெண்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி — சாவித்திரி
நடித்த
காத்திருந்த கண்கள்

3-வது வெற்றி வாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
ஈரோஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மொகோன் [பதுளை]
ராஜ் [நீர்கொழும்பு]
விஜிதா [ஹட்டன்]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்ஸின்
செல்வம்


## லண்டனில் சிறிமா

லண்டன், ஜூன் 26

இலங்கையின் முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று தமது மகன் அனுராவுடன் லண்டன் வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் அவரை வரவேற்க வந்திருந்தவர்களில் அவரது புதல்வியான சுனித்ராவும் ஒருவராவர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் லண்டன் கிளையைச் சேர்ந்தவர்கள் திருமதி பண்டாரநாயக்காவுக்கு நேற்று விருந்துபசாரம் ஒன்று அளித்தனர்.

## நா ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எஸ், இராசநாயகம் மரண விசாரணை செய்தார். ஆஸ்பத்திரியில் சிகிச்சையளித்த டாக்டர் தவராசா, நச்சுத் திராவகத்தின் மணமிருந்ததாகவும், இறந்தவர் குடித்ததற்கான காரணமெதுவும் கூறவில்லையென்றும் தெரிவித்தார்.

இறந்தவர் நேற்றுக்காலை வழக்கம்போலகடைதிறந்துவிட்டு வீட்டிற்கு சாப்பிடச் செல்லவில்லையென்றும் கடைக்கு சாமான் வாங்க வந்த அன்னத்திடம் இரு கடிதங்களை ஒப்படைத்தாரென்றும், அப்பொழுது அவர் வாந்தி எடுத்ததாகவும் மருந்து குடித்துவிட்டதாக அவர் தெரிவித்ததாகவும் மரணவிசாரணையின் போது கூறப்பட்டது.

கடையில் உள்ளஊழியர் உடனே அவரை டாக்ஸியில் பெரியாஸ்பத்திரிக்குகொண்டுசென்று காலை 10மணிக்கு வார்ட்டில் அனுமதித்ததாகவும் 11-45மணிக்கு மரணமானரென்றும்மேலும் கூறப்பட்டது.

தாயார் சரஸ்வதியம்மா, கடை ஊழியர் கந்தையா நடராசா ஆகியோர்சாட்சியமளித்தனர். பொலிஸ்இன்ஸ்பெக்டருக்கு மற்றக்கடிதம் எழுதி வைத்திருந்தார், மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற கனகசபை நவரத்தினத்தின் 1474/T இலக்க தத்துவ வழக்கில் கீழ்க்காணும் ஆதனம் 28-6-67 புதன்கிழமை காலை 10 மணிக்கு அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் மேற்கிறை ''தென்னைமூலை'' நில. பர. 3 1/2-ம் கல் வீடும் கிணறும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கும் தெற்கும் வேலாயுதர் துரைசாமி, பெண் பரிமளத்தினுதனம் வடக்கு இளையதம்பி செல்வநாயகத்தினுதனம் மேற்கு ஒழுங்கை. 1/4 பணமும் எனது செலவும் உடனே கொடுக்கவேண்டும். மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் கட்டப்படவேண்டும்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொமிஷனர் &
விலைமதிப்பாளர்.

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். 2380

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ந் திகதி வெளியிடப்பட்டது.

# ரூ. 2-50 சம்பள உயர்வு

## யாழ். மாநகரசபை உழியர்க்கு கிடைக்கும

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாநகரசபையில் கடமையாற்றும்சபைஊழியர்களுக்கு, கடந்த இரண்டுஆண்டுகளாக கிடைக்கப்படாதிருந்த வருடாந்த சம்பள உயர்வான ரூ. 2.50 ஜூன் 1ம் திகதியிலிருந்து கிடைக்கும்.

மாநகரசபையில் கடமையாற்றும் உள்ளூராட்சி ஊழியர்தவிர்ந்த மற்றும் தொழிலாளர்கள், சிறுசேவையாளர்களுக்கு இச்சம்பளஉயர்வைக் கொடுக்கும்படி விசேஷட ஆணையாளர்களில் ஒருவரான திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் இன்று உத்தரவிட்டுள்ளார். உள்ளூராட்சி ஊழியரல்லாத சபை ஊழியர்க்கு இதுவரை காலமும் வருடாந்த சம்பள உயர்வாக1 ரூபாயே கொடுக்கப்பட்டு வந்தது.

இதனைஅதிகரிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை கொள்கையளவில் மாநகரசபை நிர்வாகம் ஏற்றுக்கொண்டதாயினும் இன்றுவரை அதனைச்செயற்படுத்தாமல் இருந்துவிட்டது. இன்றுமாலை யாழ். மாநகரசபை ஊழியர்சங்க செயலாளர் திரு. நா. சண்முகநாதன், விசேட ஆணையாளர் திரு. மாணிக்கவாசகரை பேட்டிகண்டதன் பயனுகவே அவர் மேற்படி சம்பள உயர்வு உடனடியாகக் கொடுப்பது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துவிட்டு, ஜூன் மாதம் 1ம் திகதி தொடக்கம்சம்பளஉயர்வை அமுல் நடத்தும் படியுப் தினச்சம்பளம்பெறும் ஊழியர்க்கு இரு ஆண்டு சம்பள உயர்வும், பத்துவருட சேவை செய்த ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற உள்ளூராட்சிஅமைச்சரின் சுற்றறிக்கையை அமுல் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பொதுக்கூட்டம்

பூநகரி, திங்கள்

பூநகரி நாச்சிக் குடாவில் பொது மக்களினுல் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன்அபயசேகரா தலைமை வகித்தார்.

பிரதம பேச்சாளராகக் கிளிநொச்சித்தொகுதி எம். பி, திரு. கா. பொ. இரத்தினம் கலந்து கொண்டார். நாச்சிக்குடாவில் நடைபெற்று வரும் அட்டை வியாபாரத் தொழில்மீன்பிடிவியாபாரத் தொழில், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இடமாற்றம் முதலிய விஷயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

பூநகரிக்காரியாதிகாரிதிரு. என். செல்வநாயகம்திரு. ரிதஇராசதுரை, திரு. ரி, கந்சாமி, ராஜஜனுப், சி. முகம்மது அப்துல்காதர் ஜனுப்எம். வை. எம். பாறூக் ஆகியோரும் உரையாற்றினர்.

## பரீட்சையிற்சித்தி

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த திரு. கே. விவேகானந்தன் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்பரீட்சையிற்சித்தியெய்தியுள்ளார்.

இவர் உரும்பராய் இந்துக் கல்லூரி பழைய மாணவராவார்,

## 4-30 மணி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிவரை 125 நோயாளிகள் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. வழக்கமாக ஒரு நாளில் 100 நோயாளிகள் வரைதான் அனுமதிக்கப்படுவார்களாம்

வார்ட்டுகளில் கட்டில்கள் இல்லாததால் நோயாளிகள் நிலத்திலும், பாய்களிலும் படுத்திருக்கின்றனர்.

[2-ம் பக்கம் பார்க்க]

## திடீர் இலட்சாதிபதி திடீர் மரணம

கொழும்பு, திங்கள்

திடீர் லட்சாதிபதியான ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் எட்டியாந்தோட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

தேசிய சுவீப்பில்முதல் பரிசான லட்சரூபா பரிசைப் பெற்ற எட்டி யாந்தோட்டத்தை சேர்ந்த எம். ஏ. ஜெயவர்த்தன என்பவர் அவரது இல்லத்தில், நேற்று முன்தினமிரவு 8-30மணி போல் இனந்தெரியாத நபரினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுடபட்ட லட்சாதிபதியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக. உடனடியாக அவரை காரனவனெல்லை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். அவரின் நிலைமை மோசமாக இருக்கக் காணப்பட்டதால் அங்கிருந்து கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கேமரணமானுர்.

இதுசம்பந்தமாக எட்டியாந்தோட்டை பொலிசார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

# மாணவர் கோஷ்டி தகராறு

## பொலிசார் அழைக்கப்பட்டனர்

கொழும்பு, செவ்.

மவுன்ட்லவேனியா சென். தோமஸ் கல்லூரியில் இரண்டு சமயங்களைச் சேர்ந்த இரு கோஷ்டி மாணவர்களுக்கிடையில்ஏற்பட்ட நெருக்கடி நிலையொன்றை சமாளிக்கப் பொலிசாரை அழைக்க வேண்டிய நிலைமை உருவாகியது.

ஒரு கோஷ்டியினர் கல்லூரிக்கு தூதுகோஷ்டி ஒன்றை கொண்டுசெல்ல முயன்றபோது மற்றக் கோஷ்டி தடுத்ததாகவும் அதனுல் தான் இந்த நெருக்கடி ஏற்பட்டதென்றும் அறியப்படுகின்றது.

இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி இக்கல்லூரியில் ஏற்பட்டது இதுவே முதற்தடவை.

## மரண அறிக்கை

கொழும்பு S. M. R. மந்திரம்பிள்ளை, S. V. P. உலகநாதபிள்ளை, தூத்துக்குடி வே. திருநாவுக்கரசுபிள்ளை அவர்களின் சகோதரரும், யாழ்ப்பாணம் ஸ்ரீமுருகன் ஸ்டோர்ஸ், கொழும்பு ஸ்ரீனிவாசகன் அன்ட் கோ உரிமையார் வே. காந்திமதிநாதபிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவரும் ஆகிய கா. வேலாயுதம் 26-6-67 காலை 11-45 மணிக்கு சிவபதம் அடைந்துவிட்டார். அன்னரின் பூதவுடல் 27-6-67 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி மணியளவில் 15/11 மின்சார நிலைய வீதி, 1-ம் ஒழுங்கையிலுள்ள இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படுமென்பதை அறிவிக்கின்றோம். 2471

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org